**ஹாலிஎல பிரதேச சபை - 2023**

--------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஹாலிஎல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹாலிஎல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வங்கி வட்டி வருமானம் ரூபா 433,333 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 இன் கணக்குகள் தயாரிக்கும்போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டுக்கடன் மட்டும் அபிவிருத்தி நிதிய கணக்கில் (நடைமுறையல்லா பொறுப்புக்கள்) மீதி ரூபா 15,933,064 ஆக இருந்தபோதும் அது ரூபா 16,150,214 ஆக நிதிநிலமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின்போது இந்த தொகை உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகளை சமர்ப்பித்தல் அல்லது மீதிகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (இ) | வேலைகள் நிறைவேற்றப்பட்டமைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் மற்றும் பௌதிக இருப்பை உறுதிப்படுத்தாத 04 வேலைகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,449,498 வேலைக்கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் 02 வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி வேலைகள் பூர்த்தி செய்யும் நிலையில் உள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதிய மீதி, நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,332,053 ஆக இருந்ததுடன் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் ரூபா 1,307,744 ஆனமையால் ரூபா 24,309 வேறுபாடு காணப்பட்டது. | உறுதிப்படுத்தப்பட்ட மீதிகள் 2023 யூன் மாதம் வரை மாத்திரம் பெறப்பட்டுள்ளது. | கணக்கு மீதிகள் மற்றும் நேரொத்த அறிக்கையின் பிரகாரம் இனங்கண்டு மீதிகள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுப்பெறுமதி ரூபா 9,907,410 ஆன உள்ளுராட்சி ஓய்வூதிய பங்களிப்பு பணம், ஆதன வரி, ஏக்கர் வரி மற்றும் நிலுவை நீர் கட்டணங்களுக்குரிய ஓய்வூதிய உரித்து பெயர் பதிவேடு, ஆளனிக்கோவை, சபைத் தீர்மானம் மற்றும் முகாமைத்துவ தீர்மானம், நிலுவை வருமானம் மற்றும் காலப்பகுப்பாய்வு அறிக்கை போன்ற சான்றுகள் சமர்ப்பிக்காமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நீண்டகாலம் முதல் கொண்டு வரப்படுகின்ற இருப்பு மற்றும் பெறுவனவுகள் குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்படாமை. நடைமுறை சொத்துக்கள் ரூபா 468,559 மற்றும் நிலுவை வருமானம் ரூபா 31,308,247 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற சான்றுகளை கண்டறிய முடியாத மீதிகள் ஆனமையால் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு அல்லது மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XIX அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவு | கடமை பிரயாணங்களுக்காக பிரயாண தூரத்தை கவனத்திற் கொள்ளாமல் 43 சந்தர்ப்பங்களின் போது இணைந்த படியாக ரூபா 40,750 செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப் பட்டவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சட்டரீதியற்ற கொடுப்பனவுகள் மீள அறவிடப்படல் வேண்டும். |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | 2011, 2012, 2014, 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரியதாக 07 சந்தர்ப்பங்களில் ரூபா 1,215,627 தீர்க்கப்படாத முற்பணம் நடைமுறை சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | அநேகமான இவ்வாறு காணப்பட்ட பணத்தை அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,476,196 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,211,206 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 2,668,492 | 2,666,279 | 1,331,004 | 1,335,275 | 2,669,895 | 2,666,279 | 2,072,265 | 594,014 |
| (ii) | வாடகை | 1,562,862 | 1,785,402 | 1,375,610 | 409,792 | 3,885,902 | 3,934,032 | 3,364,203 | 569,829 |
| (iii) | ஏனைய வருமானம் | 5,569,000 | 6,715,887 | 4,714,221 | 2,001,666 | 1,418,800 | 1,693,608 | 1,341,333 | 352,275 |
| | மொத்தம் | 9,800,354 | 11,167,568 | 7,420,835 | 3,746,733 | 7,974,597 | 8,293,919 | 6,777,801 | 1,516,118 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 02 வருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற இறைச்சிக் கடை, மீன் கடை மற்றும் வாராந்த சந்தை வாடகைக்கு வழங்கும் வருடாந்த நிலுவைக் கேள்வி வாடகை ரூபா 2,398,341 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 16,019,773 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 19,765,054 பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணத்தை வழங்குமாறு உரிய திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்கள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 மார்ச் 19 ஆம் திகதி தலைவரின் பதவிக்காலம் முடிவடைந்திருந்த போதிலும் தலைவருக்கு வழங்கப்பட்ட ரூபா 134,900 பெறுமதியான Dell வகையின் லெப்டொப் கணனி மீளாய்வாண்டின் டிசம்பர் 31 வரையில் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | லெப்டொப் கணினியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக சபைக்கு உரிய சொத்துக்களை மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிர்மாணங்களின் பராமரிப்புக் காலம் முடிவடைந்த 15 நிர்மாணங்கள் ரூபா 390,235 நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிக்குமாறு கோரப்பட்டு 01 மாதம் முதல் 05 மாத காலம் கடந்திருந்த போதிலும் உரிய நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தி நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துதலின் தாமதம் காரணமாக ரூபா 428,441 மிகைக்கட்டணம் ஒன்று சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. மிகைக் கட்டணத்தை செலுத்துவதற்கான காரணம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மிகைக் கட்டணத்தை செலுத்துவதற்கான காரணம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கையின் பிரகாரம் கணனி துணைப் பாகங்கள், நிர்த்தாங்கி, கையடக்கத்தொலைபேசி, Dell வகையின் மொனிடர், கணினி மேசை, கணினி கதிரை, லெப்டொப், டோனர் போன்ற அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருள் இருப்பில் 722 அலகுகளில் பற்றாக்குறை காணப்பட்டது. இது தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழைய இருப்புப் பதிவேடு மற்றும் புதிய இருப்புப் பதிவேடு இணக்கம் செய்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கைகளின் பரிந்துரையை அமுல்படுத்தி இருப்புப் பதிவேடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் ஓட்டத்திற்காக ஈடுபடுத்தப்படுகின்ற நீர் பௌஸரின் உரித்தை சபைக்கு கையேற்று கணக்கீடு | சபைக்கு தற்காலிகமாக கையளிக்கப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை கையேற்று பதிவேடுகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | கொண்டுவரல் வேண்டும். |
| (இ) | சபைக்குரிய டெக்டர் மற்றும் 03 டேலர்கள் 02 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடையிலான காலம் முதல் விளைவற்று காணப்பட்டது. | 2023 இன் பொருள் மெய்மையாய்வு பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

**3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் மக்கள் பிரதிநிதிகளுக்கு மீளாய்வாண்டின் மார்ச் மாதத்தின் போது உறுப்பினர் படி ரூபா 177,833 மற்றும் தொலைபேசி படி ரூபா 12,467 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ரூபா 126,500 தொகையே பொது மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து அறவிட வேண்டி இருந்ததுடன் தொலைபேசிப் படி ரூபா 8,433.41 மாத்திரம் ஆகும். | மேலதிகமாக செலுத்துவதை தடுப்பதற்காக உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை பிரதான வாயிற்கதவிற்கு அருகில் பக்க சுவரின் மிகுதிப் பகுதியை நிர்மாண வேலையில் வேலை விடயங்கள் 02 மற்றும் 03 இல் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 122,755 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப உத்தயோகத்தர் அறிக்கையின் பிரகாரம் அளவீடுகள் ஒன்றிணைந்த முறையில் பெறப்பட்டிருந்தது. கணக்காய்வு உத்தியோகத்தர்களுடன் அணைக்கட்டு அளவீடுகள் பெறப்பட்டிருந்தது. ஆற்றிற்கு வெளியே கணக்கீட்டு முறைமையில் அளவீடுகளைப் பெறல் நிரப்பபட்டுள்ள மண் அகற்றப்படுமாயின் அணைக்கட்டின் இருப்பிற்கு பாதிப்பு ஏற்படுகின்றமையால் நிறுத்தி வைத்தல் பணம் இதுவரை செலுத்தப்படவில்லை. | பட்டியல்களை பரீட்சிக்கும் போது மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமையை ஏற்றுக் கொள்கின்றோம். தொழினுட்ப உத்தியோகத்தரிடமிருந்து மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மேற்கூறப்பட்ட 3.5(அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட வேலையின் தாமத கட்டணத்தை அறவிடும் போது ICTAD/SBD/03 சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் தாமதமான 27 நாட்களுக்காக தாமதக் கட்டணம் ரூபா 12,832 குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | உடன்படிக்கையன் பிரகாரம் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ICTAD/SBD/03 சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |